# நாம்

எதிர்காலக் கனவுகள்
கருவுறச் செய்து
நம்மை நாமே அடையாளம்
காணத் தூண்டிய
கல்லூரி நாட்களில் தொடங்கி

கண்ட கனவுகள்
நனவாக்கினோமா?
தீட்டிய திட்டங்கள்
செயல்படுத்தினோமா?
அன்று நாம் விதைத்தன
இன்று நலமாய் விளைந்தனவா?
என இடைக்காலக்
கணக் கெடுப்பில் ஈடுபட்டிருக்கும்
கண்ணடி நாட்களில் தொடர்ந்து

நம் பின் வாரிசுகள் வளர்ந்து
அவர்கள் தம்
எதிர்காலக் கனவுகளில்
சஞ்சரிக்கத் தொடங்கிவிட்டது
காண்கின்றோம்; கண்டு
மகிழ்ச்சி கொள்வோம்!
வாழ்க்கை நமக்கு வழங்கிட்ட
விலைமதிப்பில்லா நண்பர்கள்
அவர்களுக்கும் சிறப்பாய் வாய்க்கட்டும்
என்று வாழ்த்துவோம்!

தொடரும் நாட்கள் - நம்மிடையே
தொல்லை அறுத்திடும் நாட்களாய்
காணும் நுட்பங்கள் - நம்மில்
நெருக்கத்தைக் கூட்டிடும் நுட்பங்களாய்

அன்பரது ஆக்கவுணர்விலும்
செயற்பாட்டிலும்
பெரிதுகள் பல விளைவதாய்
விழைந்திடுவோம் ;

இந்த பயணத்தைத் தொடர்ந்திடுவோம்
கைத்தடி நாட்கள் வரையில்
நண்பர்களாய் ; நண்பர்
நலம் விழையும் அன்பர்களாய்
நாம் . . .

அ. செ.
ரிவர்சைட், கலி:போர்னியா
21 டிசம்பர் 2007